IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
OS No. 101/2023

**P.W.**1

| | |
|---|---|
| Name | : சிவகுமார் |
| Father/Husband Name | : கோதண்ட பாணி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | :21-06-2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.06.2025.

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

7. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 20 அ.வ.எண். 358/1992 வழக்கின் தீர்ப்பில் பக்கம் 9 ல் வாதியும் 1 ஆம் பிரதிவாதியும் சகோதரர்களாக இருந்தபோதும் அரசாங்கம் வாதியின் பெயருக்கு தான் வழக்கு சொத்துகளை பொறுத்து அடமான ஒப்படைவு செய்யப்பட்டது என்றும் அதற்கான அடமான ஒப்படைவு தொகையை வாதிதான் செலுத்தியுள்ளார் என்று நிருப்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேலும் தீர்ப்புரையின் பக்கம் 10 ல் வழக்கு சொத்திற்கு 1 ஆம் பிரதிவாதி கூட்டுபங்குதாரர் என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 1944 ஆம் ஆண்டிலிருந்து என் அப்பாவும் பெரியப்பாவும் தீர்வை செலுத்தி வந்துள்ளார்கள்.

8. ஆனால் என் அப்பா மேற்கண்ட அ.வ.எண். 358/1992 வழக்கின் தீர்ப்பில் நான் குறிப்பிட்டது போன்று என் அப்பா உடமைமூல ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பு 1 ஆம் பிரதிவாதியின் அப்பா ஆனந்தநாயக்கர் பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து காலதாமத மன்னிப்பு மனுவுடன் மேல்முறையீடு செய்தோம் என்றால் சரிதான். அந்த காலதாமத மன்னிப்பு மனுவை சார்பு நீதிமன்றம் 06/06/2011 அன்று தள்ளுபடி செய்தது என்றால் சரிதான். அதன் மீது உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனுவும் 08/04/2013 அன்று உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9. தற்போது இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 3 முதல் வா.சாஆ. 9 வரையிலான ஆவணங்கள் ஏற்கனவே அ.வ.எண். 358/1992 வழக்கில் பரிசீலிக்கப்பட்டு தான் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் வேறு பரிகாரம் கோரிதான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட ஆவணங்களின் படி நாங்கள் சொத்தின் சுவாதினத்தில் இல்லை என்றும் கூட்டுகுடும்ப பங்குதாரர்கள் இல்லை என்றும் மேற்கண்ட அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்பதால் அதே ஆவணங்கள் அடிப்படையில் இவ்வழக்கில் நான் கோரிய பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றத்தின் சீராய்வு உத்தரவு 08/04/2013 அன்று பிறப்பிக்கப்பட்டது என்றாலும் வா.சா.ஆ. 10 முதல் வா.சா.ஆ. 15 ஆவணங்கள் 1992 ஆண்டு முதல் 2013 ஆண்டு காலத்தில் வழக்கு காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

10. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 17 ஆவணம் 23/03/2009 தேதியிட்ட என் சகோதரி பானுமதி என்பவர் பெயரில் உள்ள அடமானம் பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சொத்து விவரத்தில் இரண்டு புல எண்ணில் கீழண்டை பக்கம் 1.50 ஏக்கர் என்றும், 4 சென்ட் என்றும் மொத்தமாக 1.54 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் கீழண்டை பாகம் என்னுடையது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் பாகபிரிவினை நடைபெறவில்லை அவை எனது அனுபவத்தில் இருப்பதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். அந்த சொத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்டு என் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு நான் அதற்கு கிஷ்து செலுத்தி வந்தேனா என்றால் பாகபிரிவினை எதுவும் செய்யவில்லை.

11. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 ஆன அ.வ.எண். 358/1992 வழக்கில் நானும் என் அப்பாவும் தாக்கல் செய்த பதிலுரையில் 21/09/1957 தேதியிட்ட கூர்ச்சிட்டு அடிப்படையில் பாகம்பிரித்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது செல்லகூடியது அல்ல என்றால் நினைவு இல்லை. நான் அந்த கூர்ச்சிட்டை அ.வ.எண். 358/1992 வழக்கிலும் தாக்கல்செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கிலும தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண். 358/1992 வழக்கில் நானும் என் குடும்பத்தாரும் கூட்டுகுடும்ப சொத்தில் பாகதாரர்கள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கில் பாகபிரிவினை பரிகாரம் கோரமுடியாது என்றால்ச சரியல்ல.

12. அந்த வழக்கின் தீர்ப்பு எங்களை கட்டுபடுத்தும் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி 2 ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய 21/12/2013 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லதக்கது என்றால் சரியல்ல. 5 ஆம் பிரதிவாதி 6 ஆம் பிரதிவாதி பெயருக்கு 05/04/2013 அன்று தாவா சொத்தின் ஒரு பகுதினை கிரையம் செய்தது செல்லும் என்றால் சரியல்ல. 6 ஆம் பிரதிவாதி ஏற்படுத்திய 30/10/2013 தேதியிட்ட அடமானம் ஆவணமும் உண்மையான ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் கூட்டுசுவாதினத்தில் இல்லை என்றாலும் அவை அரசாங்கத்தால் 1 ஆம் பிரதிவாதி அப்பாவிற்கு ஒப்படைவு செய்யப்பட்டது என்றாலும் அதில் வாதிகளுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் தவறான சங்கதிகள் அடிப்படையில் இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

S/d- K.Nilavarasan, 21.06.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.